RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s821

OPEN ACCESS

# நற்றிணையில் தலைவியின் சிந்தனை நிலைப்பாடுகள்

**த. அனிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசர் நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெள்ளார்- 604408, தமிழ்நாடு, இந்தியா.

# Thought positions of the Woman-lead in Natrinai

**D. Anitha** [a, *]

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts and Science, Thellar-604406, Tamil Nadu, India

* Corresponding Author: www.anithu1979@gmail.com

Received: 29-04-2021
Revised: 03-05-2022
Accepted: 11-05-2022
Published: 20-07-2022

Check for updates

**ABSTRACT**

This article aims to find out how the stances of the woman-lead's (Thalaivi) are situated in Natrinai, which is the first piece of Etthuthokai literature (the eight anthologies). The Sangam era speaks about women, i.e., the position of women in the love life of a man and a woman. Women of the Sangam period are depicted as heroic women in literature. Women were known to meet their men at all hours of the day and night, to protect crops, to be brave in their actions, and to be messengers for the king. The content of this article has been chosen with the aim of analysing the position of women in Natrinai. The woman's morals, lifestyle, grieving for the absence of a man, mission, etc. have been investigated through descriptive analysis. Not only that, the situation of Sangam women and women today has also been studied through a comparative analysis.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

எட்டுத்தொகையில் முதலாவதாக இடம்பெறக் கூடிய இலக்கியமாகிய நற்றிணையில் தலைவியின் நிலைப்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறியும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. சங்க காலத்தில் பெண்களின் அதாவது தலைவன், தலைவியின் காதல் வாழ்க்கையில் தலைவியின் நிலைப்பாடு மற்றும் அவர்களின் காதல் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றன. சங்ககால மகளிர் வீரமுடைய பெண்மணிகளாகவே இலக்கியங்களில் சித்தரிக்கப் பட்டுள்ளனர். பகல்குறி, இரவுக்குறி தலைவனைச் சந்தித்தல், புனம்காத்தல் என தனது புறமுதுகிட்டு ஓடச்செய்பவளாகவும் அரசனுக்குப் பெண்பாற் தூதுவராகவும் புலமை வாய்ந்தவராகவும் பெண்கள் விளங்கினர். அன்றும் இன்றும் பெண்களின் நிலை மற்றும் நற்றிணையில் என இவற்றை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

நற்றிணையில் தலைவியின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதனை ஆய்வு செய்யும். நோக்கில் இக்கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தலைவியின் அகஒழுக்கம், வாழ்க்கை முறை, தலைவனின் பிரிவு துயரம், தூது போன்றவற்றை விளக்கமுறை ஆய்வு மூலம் ஆராயப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி சங்ககால மகளிர் மற்றும் மகளிரின் இன்றைய சூழ்நிலை போன்றவற்றையும் ஒப்பீடு முறை ஆய்வு மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது

## எட்டுத்தொகையில் நற்றிணை

நற்றிணையில் உள்ள 401 பாடல்கள் 187 புலவர்களால் பாடப்பட்டுள்ளது. நற்றிணைப் பாடல்களைத் திணை அடிப்படையில் பார்க்கும்போது,

| திணை | பாடல்கள் |
|---|---|
| குறிஞ்சி | 130 |
| பாலை | 107 |
| நெய்தல் | 101 |
| மருதம் | 33 |
| முல்லை | 28 |

குறிஞ்சித்திணை பாடல்கள் மிகுதியாகவும், அதற்கடுத்த நிலையில் பாலைத்திணை பாடல்களும், அதைவிடக் குறைந்த நிலையில் நெய்தல் திணை பாடல்களும் மற்றும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மருதம் மற்றும் முல்லைத்திணை பாடல்களும் அமைந்துள்ளது நோக்கத்தக்கது

நற்றிணையில் பாடல்களைக் கூற்று அடிப்படையில் நோக்கும் போது.

| கூற்றுநர் | பாடலின் எண்ணிக்கை |
|---|---|
| தலைவி | 75 |
| தலைவன் | 73 |
| தோழி | 208 |
| தாய் (நற்றாய்.மற்றும் செவிலி) | 11 |
| கண்டோர் | 1 |
| பரத்தை | 8 |
| தேர்ப்பாகன் | 1 |
| மொத்தம் | 377 |

தோழி கூற்றுப் பாடல்கள் அதிக எண்ணிக்கையிலும், அதைவிடக் குறைந்த எண்ணிக்கையில் தலைவி கூற்றுப் பாடல்களும், அதற்கு அடுத்த நிலையில் தலைவன் கூற்றுப் பாடல்களும், அதைவிடக் குறைந்த எண்ணிக்கையில் தாய் கண்டோர் பரத்தை மற்றும் தேர்ப்பாகன் கூற்று பாடல்களும் அமைந்துள்ளது நோக்கத்தக்கது (Narayanasamy Iyer, 1915).

இவைதவிர பிற பாடல்களில் கூற்றுநர் இன்னார் தான். என்று ஒருவரை வரையறுக்க முடியாத இரண்டு கூற்றுநர்களை உள்ளடக்கிய பாடல்கள் உள்ளன. அவை

| கூற்றுநர் | பாடலின் எண்ணிக்கை |
|---|---|
| தோழி அல்லது. தலைவி | 11 |
| தலைவன் அல்லது தோழி | 2 |
| தலைவி அல்லது பரத்தை | 2 |
| தோழி அல்லது பரத்தை | 3 |
| தலைவன் அல்லது தலைவி | 1 |
| தலைவன் அல்லது கண்டோர் | 1 |
| கண்டோர் அல்லது தோழி | 1 |
| மொத்தம் | 21 |

தோழி அல்லது தலைவி கூற்றுப் பாடல்கள் மிக அதிக எண்ணிக்கையிலும், தோழி அல்லது பரத்தை கூற்றுப் பாடல்கள் அதற்கடுத்த நிலையிலும், தலைவன் அல்லது தோழி தலைவி அல்லது பரத்தை இவர்களுடைய கூற்றுப் பாடல்கள் சம எண்ணிக்கையிலும், மிகக் குறைந்த எண்ணிக்கையில் தலைவன் அல்லது தலைவி கூற்றுப் பாடல்களும் அமைந்துள்ளது நோக்கத்தக்கது. இதில் 234 ஆவது பாடல் முழுமையாக க் கிடைக்கவில்லை 385 ஆம் பாடலில் ஒரு பகுதியும் கிடைக்கவில்லை. இவ்வாறாக உள்ள கூற்றுப் பாடல்களில் தலைவி இடம்பெறும் கூற்றுபாடல்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதன் மூலம் தலைவியின் சிந்தனை நிலைப்பாடுகளை ஆராயப்பட்டுள்ளது (Amirthavalli, 2019).

## தோழியின் கூற்று வழி சிந்தனை நிலைப்பாடுகள்

தலைவனின் பிரிவை எண்ணி வருந்திய தலைவியின் நிலை கண்டு தோழி தலைவியிடம் கண்ணீர்விடும் உன் கண்கள் அவருக்கு தூதை அனுப்பி வைத்தன. அதனால் தலைவன் உன்னைப் பிரிய மாட்டார் எனத் தலைவியின் வருத்தத்தை உணர்ந்து தோழி கூறுகிறாள். தலைவனைக் குறிப்பிட்டபடி தலைவி சந்திக்க முடியாமல் போனதால் தோழி தலைவியின் மன நிலையை வாடிப்போன மாலையைக் போல் தளர்ந்து காணப்படுகிறார் வருந்தாதே உன் தலைவன் சொன்னபடி வருவான் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறான் தலைவன் தலைவி உடன் போக வேண்டாம் என்று தலைவிக்கு தோழி தன் தோழியர் இதனைக் காண்பர் எனவே உடன் வர மறுக்கிறாள் எனவே விரைவில் திருமணம் செய்ய முயற்சி செய்யுங்கள் என்று தலைவனிடம் தலைவியின் நிலையை எடுத்துக் கூறுகிறான் தலைவனை உன்னை கண்டு மீண்டும் திரும்பாத என் அன்பு இல்லாத நெஞ்சமும் கண்களும் கொடுமையானது என்று தலைவி தலைவன் மேல் கொண்ட காதல் இதன் மூலம் விளங்குகிறது பிரிவிடை ஆற்றாளாகிய தலைவியின் மன நிலையை உணர்ந்த தோழி உன் காதலை உன்னிடம் மிகுந்த அன்பை உடையவர் கார்காலம் தொடங்கிவிட்டது விரைவில் வந்துவிடுவார் வருந்தாதே என்று தோழி கூறுகிறாள் பிரிவிடை மெலிந்த தலைவி தோழி பருவம் காட்டி வருந்தாதே நம் தலைவர் விரைவில் வந்துவிடுவார் எனத் தலைவியின் வருத்தத்தைப் போக்க தலைவியின் மன நிலையைப் புரிந்தவளாய் தோழி கூறுகிறாள் (Amirthavalli, 2019).

## தலைவன் இடத்து தலைவியின் சிந்தனை நிலைப்பாடுகள்

தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவன் வீடு திரும்பும்போது தலைவியைக் காணும் ஆவலில் தேர்ப்பாகன் இடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"உடும்பு கொலீஇ வரி நுணல் அகழ்ந்து,

நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி"

அந்த ஊரில் அனைவரும் நிம்மதியாக உறங்குகின்றனர் (Narayanasamy Iyer, 1915). ஆனால் என்னுடைய தலைவியோ என்னையே நினைத்து உறக்கம் கொள்ளாமல் வருந்துவாள். மேலும் அவளை வருந்தச் செய்தல் நமக்கு நல்லதென்று எனவே தேரை விரைவாகச் செலுத்துமாறு தலைவன் தேர்ப்பாகன் இடம் கூறுகின்றான். இதன்மூலம் தலைமக்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பு வெளிப்படுகிறது. அதுமட்டுமன்றி தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்கையில் தலைவன் மாலை வேளையில் தலைவி தன்னை நினைத்து வருந்திக் கொண்டிருப்பாள் எனவே நாம் விரைந்து செல்ல வேண்டும் என்று தலைவியின் நிலையைக் கண்டு வருத்தம் கொள்கிறான். அதுமட்டுமன்று தலைவன் பரத்தையிடம் சென்று விட்டுத் திரும்பும் போது தலைவி தலைவன் மீது ஊடல் கொள்கிறாள் அப்பொழுது தலைவன் விருந்தினரோடு வரும் பொருட்டு தலைவி தன்னுடைய உடலை மறைத்து விருந்தினருக்கு விருந்து சமைத்து பரிமாறுகிறாள் இவ்வாறாகத் தலைவியின் நிலை குறித்து தலைவன் கூறுகிறார்.

கணவன் குடும்பத்திற்குப் பெருமை சேர்க்கும் விதமாக மணந்து கொண்ட கணவன் இல்லத்தில் வறுமை, தந்தை உணவு கொடுத்து அனுப்பி வைக்கிறார். ஆனால் அந்த உணவை வாங்க மறுக்கிறாள்

தன் கணவன் வீட்டு உணவை ஒரு வேளை உண்டாலும் ஒரு வேளை பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை ஆனால் தந்தையிடமிருந்து வாங்கமாட்டேன் அது என் கணவனுக்கு இழுக்கு என்று நினைத்து மறுக்கிறாள் இந்த நல்ல அறிவையும் ஒழுக்கத்தையும் தன் மகள் எங்கு கற்றுக் கொண்டால் என தாய் வியந்து பார்க்கிறாள் இவ்வாறு தலைவி திருமணமான ஒரு குடும்ப பெண்ணாக மாறிய பின் அவளிடம் ஏற்படக்கூடிய இந்த மாற்றங்கள் தலைவி தலைவன் மேல் கொண்ட காதலை நமக்கு தெளிவாக உணர்த்துகிறது.

## இலக்கிய பெண்களும் இன்றைய பெண்களும்

பண்டைய காலத்தில் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு வகை வடிவங்களாக வாழ்ந்து பண்டைய தமிழ் மரபைப் போற்றியும் ,காத்தும் வந்திருக்கின்றார்கள் பெண்கள் காதலோடு வீரத்தையும் பெற்றிருந்தனர். தலைவனின் நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றி வாழ்ந்து வந்தனர். அன்போடு அகவாழ்விலும் ,ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். இன்றைய சூழலில் பெண்கள் வெளியில் சென்று குடும்ப பாரங்களையும் சுமந்து தன் வாழ்விற்காகக் தன்னை ஒரு மெழுகுவர்த்தி போல உருசிக்கொண்டு வாழ்கின்றனர். இந்த பெண் சமூகம் ஒவ்வொரு பெண்களுமே தியாகிகளாக இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் (Balasubramanian, 2007).

## முடிவுரை

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகம் உறவுமுறைகளுடன் வாழ்ந்து காட்டுகிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகிறது. இதன்மூலம் தமிழ்சமூகம் பண்பாட்டின் உச்சியில் இருந்ததை அறியமுடிகிறது. அவர்களின் கற்பு என்ற ஒழுக்கம் சார்ந்த அறம் பெண்களுக்கு மட்டுமே வலியுறுத்தப்படுவது நோக்கத்தக்கது. பிரிவு, துயரம், எளிமையான இல்ல வாழ்க்கை இவற்றை தலைவியே அடைகிறாள். அவ்வாறு ஒழுக்கமே தவறாமல் கடமையை செய்யும் மகளிரே பாட்டுடை தலைவியாகக் போற்றப்படுகிறாள். ஒவ்வொரு பெண் சமூகமுமே பூமாதேவி எவ்வாறு இந்த பூமியைத் தாங்கி பொறுமைக் காத்து கொண்டு இருக்கிறார்களோ அதே போல ஒவ்வொரு பெண்களுமே பல பாரங்களைச் சுமந்து பொறுமை காத்துக் கொண்டிருக்கின்றார்கள்

## References

Amirthavalli, P., (2019) Natrinai kuttru amaippu muraiyum sikkalum, BWDA Arts and Science College, Kolliyankunam, India.

Balasubramanian, K.V., (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Narayanasamy Iyer, A., (1915) Natrinsai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License